ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்ரிங்

# THE COVAI MAIL

8 ANNIVERSARY

Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 37 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | Every Sunday, Dec 12-18, 2021, 4 Pages, Rs.5/- | Annual subscription - Rs.260/-

## 8வது ஆண்டு விழா கொண்டாடும்

# தி கோவை மெயில்

## பத்திரிகைத் துறையில் மேலும் பல சாதனைகள் புரிந்திட கே.எம்.சி.ஹெச்-ன் நல்வாழ்த்துகள்!

# புற்றுநோயை கண்டு பயப்பட வேண்டாம்!

K M C H
HEALTHCARE EXCELLENCE
Since 1990



# மறு ஆலோசனை பெறுங்கள் இலவசமாக!

புற்றுநோய் என்றாலே எல்லோருக்கும் பயம், சிகிச்சை பெற தயக்கம், மீள வழி இல்லையா என்ற ஏக்கம், உண்மை நிலையை அறிய ஆவல், எந்த நிலையில் புற்றுநோய் இருக்கிறது என்று தெரிய ஆர்வம்.

எனவே, ஒளிவு மறைவு இல்லாத தெளிவான நிலையை அறிந்து கொள்ள எங்கள் மருத்துவர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை வழங்குவார்கள்

**உங்கள் முந்தைய ரிப்போர்ட்டுகளை கொண்டுவாருங்கள்**

- எங்கள் மருத்துவ நிபுணரிடம் மீண்டும் ஒரு ஆலோசனை பெறுங்கள், **இலவசமாக...**
- கூடுதல் பரிசோதனைகள் தேவைப்பட்டால் **சலுகை கட்டணத்தில்*** செய்துகொள்ளலாம்

**13.12.2021 to 31.12.2021**
(ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் தவிர)
**9.00 am - 3.00 pm**

இடம்:
**ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை மையம்**

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலும் விபரங்களுக்கு: **733 9333 485**

# கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல்

Accredited by NABH

99, அவிநாசி ரோடு, கோயமுத்தூர் - 641 014. போன்: +91 422 4323 800 - 4000 / 680 3000
24x7 : 95665 95665 | www.kmchhospitals.com

**MAKING THE IMPOSSIBLE, POSSIBLE**

With Best Compliments from
SIVASAKTHI
PAPER DISTRIBUTORS
Distributors:
JK PAPER LTD.
Creating lasting impressions
Coimbatore & Tripur
33-A, 9th Street Extension, Gandhipuram,
Coimbatore - 641 012.
Tel.: 0422 3552548 Email: sspmbalu@gmail.com

# KASC elucidates Centre's schemes




*CA Vasuki, Secretary and Director, KASC interacting with the students of BBA*

The Department of BBA(CA) of Kongunadu Arts and Science College organized an Extension Activity on "Prime Minister Insurance and Pension Schemes" recently for the students.

The Head of the department, staff members and students explained about "Pradhan Mantri Jeevan Jyoti Bima Yojana", "Pradhan Mantri Suraksha Bima Yojana" and "Atal Pension Yojana", what is the scope of coverage of these schemes, their enrolment period, benefits and their eligibility conditions, etc. 1340 students benefited from this program.

The Secretary& Director of the college CA Vasuki appreciated the efforts taken by the Department.

# Harmonized efforts to elevate Covai should prevail!

The Covai Mail

**- Minister Senthil Balaji** *at KG Hospital's PG Degree program launch*




***From Left : Dr.G.Bakthavathsalam, Dr.Sameeran, Minister Senthil Balaji and Ashok Bakthavathsalam, Founder, KGiSL launching the course.***

Admiring the generous donations made by the people of Coimbatore towards the CM's Public Relief Fund during the second wave of Covid-19, Minister Senthil Balaji appreciated all contributors, and appealed to everyone to work with a united approach for Covai's elevation.

He said this during the introduction of a new PG program in Emergency Medicine by KG Hospital & Postgraduate Medical Institute and Research Center, Coimbatore recently.

This course was launched by him in the presence of G. S. Sameeran, District Collector, Coimbatore and Dr. G. Bakthavathsalam, Chairman of KG Hospital.

"Master in Emergency Medicine" (MEM) course is a three years course and has a selection process. The hospital conveyed that it has selected the first set of students at the launch day.

Dr. G. Bakthavathsalam conveyed to the minister and Collector about the importance of emergency medical services, the works done at KG Hospital in that field, and how it runs its daily affairs in a transparent way.

"KG is people's hospital. Even when patients come without any cash in hand, we never deny them our emergency services. We stabilize their conditions and then convey them about the further procedures to be done.If patients are financially poor, we accept what they can provide for the services provided at emergency," Dr. G.B said.He conveyed to the Minister that this hospital will be of support to the State Government by organizing free medical camps in Coimbatore. "We shall conduct 100 such camps in Government Schools and anywhere the Corporation and District Collector tells us," Dr. G.B assured.

The KG Hospital Chairman applauded the DMK-led Tamil Nadu Government for taking active measure in containing the second wave of covid-19. He also felicitated Minister Senthil Balaji who was appointed as the Minister-in-Charge for Coimbatore by the CM. He wished him to do his best for the development of Coimbatore, and improve the smart-city projects in the city.

Minister Senthil Balaji said that Hospitals will appear like they are temples when a person looks at it after a successful procedure.

In that way, he appreciated KG Hospital for playing a significant role in saving lakhs of patients brought in critical situations.

He conveyed that it was this hospital and Dr. GB that treated him when he was suffering from Ulcer.

He thanked Dr.GB for volunteering to conduct free medical camps in the city.

He also appreciated the voluntary donations made by Coimbatore's Industrialists and philanthropists, and recognized the contribution made by the city towards the CM's public relief fund this year.

He expressed that everyone's participation should be there in the development of Coimbatore, and he (Minister Balaji) will surely take the requests of the people of Coimbatore to the CM's ears.

With best compliments from
pricol

With Best Complements from
THE PRIDE OF COIMBATORE
50
YEARS OF TASTE MAKING

Annapoorna
www.sreeannapoorna.com

*Unique, Flexible & Timeless*

# Paridhi Bangles from Kirtilals are magical!

## *- Actress Priya Bhavani Shankar*

David Karunakaran
The Covai Mail

One of India's reputed premium fine diamond and gold jewellery brands Kirtilals unveiled on Wednesday its 'Paridhi' range of bangles collection.

It was launched by the ravishing diva Actress Priya Bhavani Shankar in Coimbatore. The bangles are a product of months of research and development work by the jewellers. The company has infused its proprietary technology in the bangles which makes it flexible for wearing for women of different wrist sizes. The bangles are adaptable upto 4 wrist sizes.

The collection has 100+ designs and the range starts from Rs. 1 Lakh. The jeweller has announced a huge offer for the customers, which could last till Pongal.

Suraj Shantakumar, Director, Business Strategy of Kirtilals was present at the occasion and he said that the climate of jewelry business looks positive, and Kirtilals has made its products suiting customer's needs and preferences. He also told that, to make it more convenient for the customers, virtual store feature has been introduced so that the customers can get the shopping experience right from the comfort of their houses.

**When the staff of the showroom explained about the collection, it felt like I was in a magic show.** *- Priya Bhavani Shankar*



*Actress Priya Bhavani Shankar launching the bangles. Also seen is Suraj Shantakumar, Director, Business Strategy of Kirtilals.*

### My first shoot was for Kirtilals!

Priya shared that she is very happy to launch Paridhi Bangles of Kirtilals. She said that when the staff of showroom explained to her about the collection, she felt like she was in a magic show. She also told that it was for Kirtilals she did her first professional photo shoot when she was in college, and expressed that it was a joy to come and launch this collection for Kirtilals.

She was highly appreciative of pearl jewels of the brand which has recently won great honors. She also expressed her wonder at the designs and the flexible technology used in the Paridhi bangles. Noting that the diamond jewellery manufacturing unit of Kirtilals has 90% participation by women, she said she would very much love to visit it next time.

# Vi demonstrates strength in 5G

The Covai Mail

Vodafone Idea Limited (VIL) announced that it used Nokia's 5G Radio Access Network (RAN) and 5G core to successfully demonstrate secure network slicing.

Network slicing allows service providers to create multiple virtual networks over the same physical network. These virtual networks can be configured based on different parameters, including network performance, speed, bandwidth and latency to offer differentiated services.

This allows service providers to cost-effectively address the requirements of diverse customers by creating network slices in line with Service Level Agreements (SLAs) within minutes.

The trial was conducted in Gandhinagar in the state of Gujarat in western India where Vi is conducting 5G trials on Govt. allocated 5G spectrum. Deployment of network slicing will enable Vi to quickly add new revenue streams while delivering innovative 5G use cases to the users and to enterprises.

Two network slices were created as part of the demonstration.

# Škoda multiplies customer touch points

The Covai Mail

Škoda Auto India has been steadily expanding its market presence across India with a focus on southern India.

The Czech auto brand has grown its customer touchpoints by 84% in the southern market over the last year, where the dealer network grew from 38 touchpoints in 2020 to 70 touchpoints in 2021.

This expansion plan is in alignment with the brand's strategy of moving closer to customers by increasing the number of touchpoints across the country. This rapid expansion of the dealer network in the south, has resulted in 90% growth in sales, across southern region.

The company has also doubled its city-wise presence in southern India, from 19 cities in December 2019 to 38 in November 2021. Along with the metro cities, the brand is now equipped and ready to serve customers in markets like Shimoga, Karur, Dindigul, Muvatupuzha and Kannur, with further plans to enter Tirupati, Karimnagar, Gulbarga, Bellary and Anantpur in the coming months.

This expansion coincides with the recording of over 20,000 bookings for the KUSHAQ SUV.

# EKKI aids State in restoring waterlogged areas

The Covai Mail

For almost three weeks, continuous downpour had caused significant flooding in various parts of Tamil Nadu. During this period of crisis, Pumps & Water technology firm EKKI's dewatering solutions supported Tamil Nadu and other coastal areas in India to manage and pump out rainwater rapidly from flooded areas.

The company stated in a press release that it had provided its pumps for the operation and deployed its technical team to support on-ground work. It further mentioned about the 'Bozo' range of Dewatering pumps used in the dewatering operations. According to the company, these pump are perfectly designed for this type of operation-capable of handling high volumes of water and withstanding the toughest operating conditions.



*EKKI's executive team briefing about their operations to Kanimozhi MP*

Kanishka Arumugam Co-CEO of EKKI said "EKKI through its partnership with global wastewater leader HOMA is one of the very few water technology companies in the world to give complete storm water & dewatering pump solutions up to 500HP and has deep design knowledge in this space".


"We are pleased to be partnering with the government authorities in Tamil Nadu, India to enhance people's lives in these difficult times, we look forward to continued collaboration with the Government to help alleviate similar situations in the future "said

EKKI's executive team also briefed the Member of Parliament Kanimozhi Karunanidhi about the dewatering technologies deployed by the company while she was overseeing the flood relief operations recently in the state.

To ADVERTISE IN THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.



# சென்னைக்கு அடுத்து கோவையா?

**ஆசிரியர்**
**தி கோவை மெயில்**

தமிழகத்தில் பல விஷயங்களில் சென்னைக்கு அடுத்தது கோவை என்று பெருமையாகக் கூறுவது உண்டு. இந்த மழைக் காலத்தில் அது மறுக்க முடியாத உண்மையாகி விட்டது. தமிழகத்தில் சென்னைக்கும் மற்றும் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கும் எப்பொழுதும் ஒரு வேறுபாடு உண்டு. தஞ்சாவூரில், கடலூரில் தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் வரும். பயிர் சேதம் பாதிப்பு ஏற்படும். வெள்ளம் வரும், வடியும் இதுதான் வாடிக்கை.

ஆனால், சென்னையில் மட்டும் மழை நீர் வாய்க்கால்கள் முழுவதும் அடைத்துக் கொண்டு மழை வெள்ளம் வடிய மறுக்கும். குடியிருப்புகளில் வசிப்போர் வெளியே வர முடியாமல் தவிப்பார்கள். தார் சாலைகளில் வெள்ளத்தில் படகுப் போக்குவரத்து நடக்கும். வாகனங்கள் எங்கும் செல்ல முடியாமல் ஊர்வலமாக நிற்கும்.

சென்னைக்கு அடுத்த நகரமான கோவைக்கும் இதே நிலைதான். பொதுவாக கடல் மட்டத்திலிருந்து சுமார் 300 மீட்டர் உயரத்தில் இருந்தாலும் கோவை நகரப் பகுதியில் மழைநீர் வடிகால் என்பது நடைமுறையில் சரியான முறையில் இல்லை என்றே கூற வேண்டும். கோவை நகரத்தை மேற்கு கிழக்காக பிரித்தால், ஒரு சின்ன மழை வந்தால் போதும் கோவையில் இரு புறமும் போக்குவரத்து ஸ்தம்பித்து விடும். வாகனங்கள் வரிசை கட்டிக் கொண்டு நிற்கும். பள்ளிக் குழந்தைகள் தொடங்கி மருத்துவமனை செல்லும் நோயாளிகள் வரை அது ஓமிக்ரான் நோயாளியாக இருந்தாலும் சரி வாகனப் பேரணியில் நிற்க வேண்டியதுதான். அவ்வளவு போக்குவரத்து நெரிசல் ஏற்படும்.

சென்ற சனிக்கிழமை அப்படி ஒரு அதிர்ஷ்ட நாள். மதிய நேரம் பார்த்து சில சென்டிமீட்டர் கணக்கில் மழை வந்து விட்டது. அவ்வளவுதான் கோவை நகரமே அல்லல் பட்டுவிட்டது. கோவையை கிழக்கு மேற்காக பிளந்தது போல, எங்கும் போக முடியாமல் இடையில் தண்ணீர் தேங்கி விட்டது. மாநகராட்சிப் பணியாளர்கள், அதிகாரிகள், போக்குவரத்துக் காவலர்கள் இவர்களுடன் வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் படாதபாடு பட்டார்கள்.

கோவை ரயில் நிலையம் அருகே உள்ள பாலம், அவினாசி சாலை மேம்பாலம், காளீஸ்வரா மில் பாலம், கிக்கானி பள்ளி பாலம், வடகோவை மேம்பாலம், சிவானந்தா காலனி பாலம் என்று மழைநீர் தேங்கி நின்று வாகனங்கள் எங்கும் செல்ல முடியாதபடி கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நேரம் விரயம், ஆற்றல் விரயம், பொருளாதார விரயம், எரிபொருள் விரயம் கூடவே ஒவ்வொரு முறையும் மன உளைச்சல் என்று இவ்வளவும் ஒரு நல்ல மழை வந்தால் ஏற்பட்டு விடும் நிலை ஏற்படுகிறது.

முன்பு இருந்த காலத்துக்கு, மக்கள் தொகைக்கு ஏற்ப வாகன எண்ணிக்கை, சாலை வசதி அன்று இருந்தது. ஆனால் இன்று கோயம்புத்தூர் நகரம் 35 வார்டு 72 ஆகி, 72 என்பது 100 ஆக மாறி இருக்கும் பொழுது சாலை வசதி போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை சீர்படுத்தி இருக்க வேண்டாமா ?

மேற்சொன்ன எல்லா பாலங்களும் ரயில் பாதையைக் கடந்து போவது தவிர, வேறு எந்த உதவியும் நடைமுறையில் செய்வதில்லை. வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் திட்டத்தோடு புதிதாக எந்த திட்டமும் வந்ததாகத் தெரியவில்லை. அதுவும் ஒரு மழைக்காலம் வந்துவிட்டால் போதும் சாலைகளில் உள்ள பள்ளங்கள் கொஞ்சம் ஏமாந்தால் நம்மை பாதாளத்தில் கொண்டு போய் விட்டு விடும் அந்த அளவு குண்டும் குழியுமாக கல்லும் கரடுமாக இருக்கின்றன. சாலைகளில் தேங்கும் தண்ணீரை விரைந்து அகற்ற சக்தி வாய்ந்த மோட்டார் மற்றும் பணியாளர் குழுவை இது போன்ற மழைக் காலங்களில் தயாராக வைக்க வேண்டும்.



அதே போல மழைநீர் தேங்காமல் நகரத்தில் ஆங்காங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் இருக்க மாநகராட்சி, காவல்துறை மற்றும் வல்லுனர்கள் இணைந்து செயல்படும் வகையில் ஒரு எதிர்காலத் திட்டத்தை திட்டமிட வேண்டும். தற்போது ராக் எனும் உள்ளூர் சார்ந்த தொண்டு நிறுவனம் இணைந்து செயல்படுவதாக செய்தி வந்துள்ளது. இது போன்றவர்களை வரவேற்று இணைந்து பணிபுரிய வேண்டும்.

இப்போது இந்த போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக இன்னும் 4 புதிய பாலங்களை சாய்பாபா காலனி, துடியலூர், சரவணம்பட்டி போன்ற இடங்களில் கட்டுவதாக செய்தி வந்திருக்கிறது. அந்த பாலங்கள் கட்டும் போதும் கோவையின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்த வேண்டும். தற்போது உள்ள பாலங்களும் இனிமேல் வரப் போகின்ற பாலங்களும் மக்களுக்காக பயன்படும்படி அமைய வேண்டும். மழையில் மாட்டிக் கொண்டு தவிக்கக் கூடாது என்பதே கோயம்புத்தூர் மக்களின் வேண்டுகோள்!

# கே.பி.ஆர் கல்லூரியில் ஆரோக்கிய சந்தை



ஆரோகிய சந்தையைத் தொடங்கி வைத்து ஸ்டால்களை பார்வையிடுகிறார் கே.பி.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைவர் கே.பி.ராமசாமி.

**தி கோவை மெயில்**

கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் ஸ்கூல் அஃப் மேனேஜ்மென்ட் சார்பில் ஆரோக்கிய சந்தை என்ற இரண்டு நாள் எக்ஸ்போ நடைபெற்றது. 50 ஸ்டால்களை உள்ளடக்கிய இந்த சந்தையில் பலவகையான பொருட்கள் இடம்பெற்றன.

கே.பி.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைவர் கே.பி. ராமசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி நிகழ்வைத் தொடங்கி வைத்து அனைத்து ஸ்டால்களையும் பார்வையிட்டார்.

இது குறித்து கே.பி.ஆர் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் பாலுசாமி கூறுகையில்: கே.பி.ஆர் கல்லூரியில் நடைபெறும் ஆரோக்கிய சந்தை எக்ஸ்போ வாயிலாக பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் தங்களது உடல் ஆரோக்கியத்தை பேண வேண்டும் என்பது தான் இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம்.

உடலுக்கு ஆரோக்கியம் தரக்கூடிய பொருட்களை அனைவருக்கும் தெரிவிக்கும் விதமாக இந்த இரண்டு நாள் எக்ஸ்போ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இது போன்ற எக்ஸ்போ மூலம் இத்துறை சார்ந்த மாணவர்களுக்கு தொழில் முறை குறித்த புரிதல்கள் உண்டாகும். எதிர்காலத்தில் மாணவர்கள் ஒரு சிறந்த தொழில்முனைவோராகவும் திகழ்வதற்கு இம்மாதிரி நடத்தப்படும் நிகழ்வுகள் வழிகாட்டியாக அமையும் எனப் பேசினார்.

இந்நிகழ்வில் கே.பி.ஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் அகிலா, ஸ்கூல் ஆஃப் மேனஜ்மென்ட் டீன் ஷியாம் சுந்தர், கே.பி.ஆர் மில் பணியாளர்கள் கல்விப் பிரிவு முதல்வர் சரவணபாண்டி, துறைத்தலைவர் ஹேமலதா, உதவிப் பேராசிரியர் ராஜேஸ்வரி துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் சார்பில்

# தேங்கிய மழை நீர் அகற்றம்

**தி கோவை மெயில்**

கோவையில் பெய்த கன மழை காரணமாக லங்கா கார்னர், அவினாசி சாலை மேம்பாலம், கிக்கானி பள்ளி கீழ் பாலம், சிவானந்தா காலனி பைபாஸ் சாலை கீழ்பாலம் போன்ற இடங்களில் மழை நீர் தேங்கியது. இதில் தனியார் பஸ், கார் போன்றவை நீரில் மூழ்கின. மேலும் வடகோவை, லட்சுமி மில்ஸ் ஆகிய பகுதிகளில் வெள்ளம் அதிக அளவில் வழிந்தோடியது.

கோவை மாவட்ட நிர்வாகம் மற்றும் கோவை மாநகராட்சியுடன் சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் ஒரு பகுதியாக இணைந்து உடனடியாக மழைநீரை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் சவுந்தரராஜன் அறிவுறுத்தலின்படி கோவை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சியுடன் இணைந்து சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் நிறுவனத்தின் அதிகத் திறன் கொண்ட மழை நீர் அகற்றும் பம்புகளுடன் கூடிய 5 வாகனங்கள் நகரின் முக்கிய பகுதிகளுக்குச் சென்று தனது பணிகளைத் தொடங்கியது..

இதில் 4 வாகனங்கள் அவினாசி சாலை மேம்பாலத்தின் கீழ் பகுதியில் தேங்கிய 43 லட்சம் லிட்டர் மழைநீரை அகற்றியது. மூன்றாவது வாகனம் மேம்பாலத்தின் மேற்கு பகுதி நுழைவு பகுதியில் தேங்கிய 6 லட்சம் லிட்டர் மழைநீரை அகற்றியது. நான்காவது வாகனம் பாலத்தின் மேற்குப் பகுதியின் இரண்டாவது பகுதியில் தேங்கிய 5 லட்சம் லிட்டர் மழைநீரை அகற்றியது. மேலும் 5வது வாகனம் கோவை சத்தியமங்கலம் சாலையில் கரட்டுமேடு பகுதியில் சிவன் கோவில் அருகில் தேங்கிய 8 லட்சம் லிட்டர் மழைநீரை அகற்றியது.

மேலும் இந்த சேவையானது சி.ஆர்.ஐ. பம்ப் நிறுவனம் கோவையைத் தவிர சென்னை மற்றும் தூத்துக்குடியில் அந்தந்த மாநகராட்சியுடன் இணைந்து சிறப்பாகச் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

May your light add more brightness
to the society;
let your contributions to Covai
be even greater in the coming years.
Wishing you a
Happy 8th Anniversary.

With Best Wishes from
TRIGGER & TRIGGER daily